49

# கிரீஸ் தேசத்துக் கதைகள்

திரு. P. M. G. வேங்கடகிருஷ்ண முதலியார்

இயற்றியவை

THE TEACHERS' PUBLISHING HOUSE,
EDUCATIONAL PUBLISHERS,
G. T. MADRAS.

*Copyright*] 1930 [*Price As. 3.*

176163

# கிரீஸ் தேசத்துக் கதைகள்

திரு. P. M. G. வேங்கடகிருஷ்ண முதலியார்

இயற்றியவை

சென்னை:

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

1930

பதிப்புரிமை]

[விலை அணா 3.

# உள்ளடக்கம்


அட்லான்டா சரிதம் ... 1

பண்டோரா கதை ... 22

உண்மை நட்பு அல்லது
தாமனும் பிதியஸும் ... 37

THE PROGRESSIVE PRINTERS,
17, Coral Merchant Street,
MADRAS.

கிரீஸ் தேசத்துக் கதைகள் :

# அட்லாண்டா சரிதம்.

அநேக வருடங்களுக்கு முன் ஆர்கேடியா என்னும் தேசத்தை ஜேஸஸ் எனும் அரசன் ஆண்டு வந்தான். அந்நாடு மிகவும் செழிப்பானது. அந்நாட்டில் மலைகளும், ஆறுகளும், பள்ளத்தாக்குகளும், பயிர் செய் நிலங்களும் பல இருந்தன. புஷ்பவகைகளுக்கும், பழங்களுக்கும், காய்கறிகளுக்கும் அத்தேசம் கீர்த்திபெற்றது. அந்நாட்டு ஜனங்கள் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு திருப்தியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

ஜேஸஸ் அரசனுக்கு எல்லா விதமான செல்வங்களுமிருந்தன. பிள்ளைப்பேறு மாத்திரம் அவனுக்கு இல்லை. அதனால் அவன் மிகவும் வருந்தினான். கடைசியில் அவனுடைய மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைக்கு அட்லாண்டா என்று பெயரிட்டார்கள். அரசனுக்குப் பெண் குழந்தை பிறந்தது பிடிக்கவில்லை. அவன் ஒரு நாள் நடுராத்திரியில் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு போய் ஒரு மலையின் சாரலில் கிடத்தி விட்டு வந்து விட்டான். ஆனாலும் அக்குழந்தையின் ஞாப

கம் அடிக்கடி அவனை வருத்தியது. அக் குழந்தையைத் தேடிப் பிடித்துக் காப்பாற்ற வேண்டுமென்று அவன் எண்ணி அதற் கான முயற்சிகளை யெல்லாம் செய்தான். குழந்தை அகப்படவேயில்லை. அட்லாண் டாவுக்குப் பிறகு அவனுக்கு வேறு குழந் தைகள் பிறக்கவில்லை. அதனால் அவன் மிகவும் வருந்தினான்.

இனி, மலைச்சாரலில் கிடத்தப்பட்ட குழந்தையின் கதியாதாயிற்று என்பதைக் கவனிப்போம். அங்கே கிடத்தப்பட்ட குழந் தையைப் பெண்கரடி ஒன்று கண்டெடுத்து அதைத் தன் குட்டிகளுடன் சேர்த்து வளர்த்து வந்தது. அக்குழந்தையும் பல மாதங்கள் வரை கரடிப்பாலைக் குடித்துக் கொண்டு அக்குட்டிகளுடன் இனிது வளர்ந்தது. இப்படியிருக்கையில் அதை ஒரு நாள் சில இடையர் கண்டு தங்களு டைய வீட்டிற்கு அழைத்துச் சென்று வளர்த்து வந்தார்கள். அவ்விடத்தில் அட்லாண்டா சௌக்கிய மாயிருந்தாள். அவள் பாலப்பருவத்தைக் கடந்து மங்கைப் பருவத்தையடைந்தாள்; தேகவலிமையிலும் ஓடுவதிலும் நிகரற்று விளங்கினாள். இடை யர்களுடன் சேர்ந்து அவள் அடிக்கடி காட்டிற்கு வேட்டையாடச் செல்வதுண்டு. அப்போது அவளுடன் ஓட்டத்தில் எவ ரும் பந்தயம் போட முடியாது. அவ்வளவு

கெட்டிக்காரியாயிருந்த படியால் அவள், அரசனால் ஏற்படுத்தப்பட்ட பந்தயமொன்றிலும் ஜயம் பெற்றுத் தனக்கு யாரும் நிகரில்லையென்று விளங்கினாள்.

அப்போது காலிடன் என்ற பிரதேசத்தை ஈனியஸ் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் கன்னிகட்கும் வேடர்கட்கும் தேவதையான டயானாவுக்குக் கோபம் வரும்படி நடந்து கொண்டான். அதனால் அத்தேவி அவன் மீது கோபங்கொண்டு அவனுடைய தேசங்களைப் பாழ்படுத்தக் கொடிய காட்டுப்பன்றி ஒன்றினை அனுப்பினாள். அப்பன்றி அநேக சேத முண்டாக்கியது. அரசனுடைய குமாரனாகிய மெலிஜர் என்பவன் அப்பன்றியைக் கொல்வதற்காகக் கங்கணங் கட்டிக்கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டான். அவனுக்குத் துணையாக அநேக வீரர்கள் சேர்ந்தார்கள். அவர்களோடு அட்லான்டாவும் சென்றாள், அவளே அக்காட்டுப் பன்றியைத் துரத்திச் சென்று அதனை முதன் முதலாகக் காயப் படுத்தினாள். அதற்குப்பின் அரசனுடைய குமாரன் அதைக் காடு மேடுகளிலெல்லாம் துரத்திச் சென்று கடைசியில் கொன்று வீழ்த்தினான். அவ்வரசிளங்குமரன் அதனுடைய தோலை உரித்து அட்லான்டாவுக்குச் சன்மானமாகக் கொடுத்தான்.

டயானாவினால் ஏவப்பட்ட காட்டுப்

பன்றியைக் கொன்ற அரசிளங்குமரன் தைரியத்திலும் வீரதீர பராக்கிரமங்களிலும் நிகரற்ற அட்லான்டாவைக் கலியாணம் செய்துகொள்ள எண்ணித் தன்னுடைய விருப்பத்தை அவளுக்குத் தெரிவித்தான். ஆனால் அவள் அவனை மணந்து கொள்ள விருப்பங்கொள்ளாமல் அவனுடைய வேண்டுகோளை மறுத்துவிட்டாள்.

மேலே கூறிய சம்பவம் நிகழ்ந்த சில தினங்களுக்குப் பின், ஜேஸஸ் அரசன் அட்லான்டாவைக் காணச் சந்தர்ப்பங்கள் நேரிட்டன. அப்போது அவன், அவளைத் தன்னுடைய குமாரி யெனக்கண்டு கரை கடந்த சந்தோஷங்கொண்டு, அவளை அது வரையில் காப்பாற்றிவந்த இடையர்களுக்குப் போதுமான சன்மானங்கள் கொடுத்து விட்டு, தன் அரண்மனைக்கு அழைத்துச் வந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான்.

அட்லான்டா குழந்தைப் பருவ முதற் கொண்டே காடுகளிலும் மலைகளிலும் மிருகங்களோடும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர்களிடத்திலும் வளர்ந்து வந்தபடியால் அவளுக்கு முதலில் இராஜரீக டாம்பீகங்கள் பிடிக்கவில்லை. மலைகளுக்கும் காடுகளுக்கும் ஓடி விடலாமாவென்று அடிக்கடி அவள் எண்ணுவதுண்டு. இடையர்,

களிடத்தில் வளர்ந்து வந்தபோது அவள் தன்னிஷ்டம் போல் ஆடியும் பாடியும் வந்தாள். அரண்மனைக்கு வந்த பின் அவள் அங்ஙனஞ் செய்யாமல், அவ்விடத்திற்கு வரும் பிரபுக்களையும் மற்றவர்களையும் கண்டு பயந்து ஓடி ஒளிந்து கொள்வாள். அரசனுடைய கட்டளைக்கு அஞ்சி ஓடாமல் நிற்பதாயிருந்தாலும், அவள் தன்னுடைய தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நிற்பாள். இங்ஙனம் அவள் நிற்பதால் அவளுடைய முகத்தைப் பிறர் பார்க்க முடியவில்லை. அவள் யாருடனும் பேசமாட்டாள். அவளை மணந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் அரண்மனையை நாடி வந்தவர்களுக்கு அவளுடைய நடத்தை பிடிக்கவில்லை; ஆனாலும் அவளுடைய அழகில் ஈடுபட்டவர்களாகி அவளை மணக்கத் தீர்மானித்திருந்தபடியால், அவர்கள் அவள் நடத்தையை அரசனிடம் தெரிவித்து, அவன் அதற்குத்தக்க பரிகாரங்களைத் தேட வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களுடைய வேண்டுகோள்களை ஏற்ற அரசன் அவர்களைப் பார்த்து 'அரசிளங்குமரர்களே! தயைசெய்து அவளுடைய நடத்தையைப்பொறுத்துக் கொள்ளுங்கள். அவள் அந்நியர்களைக்கண்டு அச்சமும் நாணமும் கொள்வதற்குக் காரணம் நீண்ட காலமாய் நாகரீகமற்ற இடையர்களிடத்தில்

வளர்ந்து வந்ததேயாகும். அவள் கலியாணஞ் செய்து கொள்ள வேண்டுமென்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். நான் அவளுடன் கலந்து பேசி உங்களில் ஒருவரைக்கலியாணம் பண்ணிக்கொள்ளும்படியாகக் கூறுகிறேன்' என்றான். அரசன் அவளைப் பார்த்துக் கலியாணம் செய்து கொள்ளும்படி கூறிய போது அவள் அரசனை நோக்கி 'என் தந்தையே! என்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தாதீர்கள். அவர்கள் என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ள என்னிடம் வந்தால் நான் ஓடி விடுவேன். அவர்களால் என்னைப்பிடிக்க முடியாது' என்று கூறினாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் தன் மகள்மீது கோபங்கொள்ளவில்லை. பின்னர் தன் மகளைப்பார்த்து, 'நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். அந்த யோசனை உனக்குச் சரியென்று பட்டால் அதன்படி நீ நடந்து கொள். இல்லாவிட்டால் அதை விட்டுவிடு. நீயோ ஓடுவதில் மகா கெட்டிக்காரி. உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள விரும்புகிறவர்கள் உன்னுடன் ஓடவேண்டுமென்றும், அங்ஙனம் ஓடுகிறவர்களில் எவனொருவன் உன்னை ஜெயிக்கின்றானோ அவனே உனக்குப் புருஷனென்றும் நான் விளம்பரப் படுத்துகிறேன். இவ்வேற்பாடு உனக்குச் சம்மதந்தானா?" என்று கேட்டான்.

அரசன் இங்ஙனங் கேட்கவே, ஓடுவதில் தனக்கு ஒருவரும் நிகரில்லையென்பதை உணர்ந்திருந்த அட்லான்டா அவ்வேற்பாட்டிற்குச் சம்மதித்தாள். தன் மகள் ஒருவனை மணந்து அவனுடன் இல்லறவாழ்க்கையை நடத்த வேண்டுமென்று அரசன் எண்ணினுனைகயால், அவளுடன் ஓடுகிறவன் அவளைவிட அதிக வேகமாக ஓட வேண்டுமென்று தாண்ட, ஓட்டத்தில் தோற்றுப் போகிறவனுடைய தலை துண்டிக்கப்பட்டுவிடும் என்ற ஒரு நிபந்தனையையும் ஏற்படுத்தியிருந்தான்.

அட்லான்டாவின் அழகில் ஈடுபட்டிருந்த பிரபுக்களும், சிற்றரசர்களும், அரசிளங்குமரர்களும், தங்களுடைய இன்னுயிரையும் பொருட்படுத்தாமல், அவளுடன் ஓடத் துணிந்து, இறுதியில் உயிரைப்போக்கடித்துக் கொண்டனர். தன்னுடன் ஓடித் தோற்றுப் போனவர்களுக்கு இரக்கங்காட்டும்படியாய் அவள் தன் தகப்பனுரை வேண்டிக்கொள்வது வழக்கம். ஆனுல் அரசனே தான் ஏற்படுத்திய கட்டளைகளைச் சிறிதும் தளர்த்த வில்லை. அட்லான்டாவை ஜெயித்து அவளைக்கலியாணஞ் செய்துகொள்ள விரும்பியவர்களில் அநேகர் மாண்டனர். எனினும் அவ்வாசையைத் துறந்தவர்கள் வெகு சிலரேயாயினர்.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் மிலான்

தேசத்தைச் சேர்ந்த அரசிளங்குமரன் மற்றொருவன் வேட்டையாடிக்களைத்து ஆர்கேடியா நாட்டு எல்லைக்குள் நுழைந்தான். அப்போது தெருக்களிலெல்லாம் ஜன சந்தடியற்றிருந்தது. ஜனங்களெல்லாம் குறிப்பிட்ட ஓரிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்ததை அவன் கண்டான். அவர்களுடைய முகங்களில் சந்தோஷக்குறி காணப்படவில்லை. அவர்களுடன் சேர்ந்து அரசிளங்குமரனும் அவர்கள் சென்று கொண்டிருந்த இடத்தை யடைந்தான். பந்தயத்திற்கென்று அமைக்கப்பட்ட ஒரு மைதானமாயிருந்தது. அவ்விடத்தில் மேடையொன்றும் போடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. அம்மேடையின்மேல் தக்க ஆசனங்களும் இடப்பட்டிருந்தன. அவ்வாசனங்களில் அரசனும் அவனைச் சூழ்ந்து அவனுடைய மந்திரி பிரதானிகளும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் அவர்களுக்கு அடுத்தாப்போல் அபாலோ, டயானு என்னும் தெய்வங்களின் பிரதிமைகள் இருந்தன. பித்தளையால் செய்யப்பட்ட பலிபீடம் ஒன்றும் அவ்விடத்தில் தோன்றியது அதன் பக்கத்தில் அரக்கனுக்கு ஒப்பான மனிதனொருவன் கையில் ஓங்கியவாளுடன் நின்றிருந்தான். கட்டியக்காரனொருவனும் வாயில் ஊது குழலை வைத்துக் கொண்டு நின்றிருந்தான். அம்மைதானத்தில் இவர்களல்லாமல் குறிப்பிட்ட ஓரிடத்தில் இரண்டு

பேர் ஓடுவதற்குத் தயாராக நின்று கொண் டிருந்தார்கள். அவர்களிருவரில் அந் நாட்டு அரசனுடைய மகள் ஒருத்தி. இன் னெருவர் அவளைப் பந்தயத்தில் வென்று மணம் புரிய எண்ணங்கொண்டு அவ்விடத் திற்கு வந்த ஒரு வீரன். இவன் வாலிப வய துடன் கூடி கட்டான தேகத்தையும் கொண்டு விளங்கினன். அவனுடைய தலை மயிர் சுருண்டு பார்வைக்கு அழகாகக்காணப் பட்டது. அவனுடைய கையில் மரக்கிளை யொன்றிருந்தது. பந்தயத்தில் வெற்றி யடையா விட்டால் உயிரை இழக்க நேரிடு மென்ற எண்ணம் அவனைப் பெரிதும் பாதித்து வந்தது. எனினும் அவனுக்குத் தன்னுடன் ஓடவிருந்த பெண்ணைக் கலியா ணம்செய்துகொள்ள வேண்டுமென்றவிருப் பம்மாத்திரம் மிகுதியாயிருத்தது. அவ் விருப்பம் காரணமாய் அவன் தன் பார் வையை யெல்லாம் அப்பெண்ணின் மீதே செலுத்தினன். அவனுடன் ஓடவிருந்த அரசிளங் குமாரியாகிய அட்லாண்டாவோ நடுக்கம், அச்சம், கூச்சம் ஒன்றுமின்றி அமைதியுடனும் சாந்தத்துடனும் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய உருவ மும் அவயவங்களும் பார்ப்போர் மனதை வசீகரிக்கக் கூடியனவாயிருந்தன. அவ ளுடைய முகத்தில் கவலை என்பது சிறிது மில்லை.

கட்டியக்காரன் ஊது குழலைவாயில்

வைத்துக் கொண்டு அரசனுடைய கட்டளையை எதிர் பார்த்திருந்தான். அப்பொழுது அரசன்கட்டளையிட அவன் தன் பலங்கொண்டமட்டும் ஊதினுன். அவ்வோசையைக் கேட்டவுடன் இருவரும் ஓடுவதற்கு ஆரம்பித்தனர். இங்ஙனம் ஓடுவதை இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்த ஜனங்கள் ஒரே மொத்தமாய் அட்லான்டாவுடன் ஓடும் ஆண்மகனுக்கே ஜெயம் கிடைக்க வேண்டுமென்று ஆரவாரித்தனர். அவர்கள் அனைவரும் ஒரே மொத்தமாய் ஒருவர் சார்பிலேயே இருந்தது அரசிளங்குமாரனுக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது. கடைசியில் அரசிளங்குமரியே வெற்றியடைந்தாள். தான் வெற்றி யடைந்தமைக்காக அவள் சந்தோஷப்படவில்லை. ஒன்றும் நடைபெருததைப் போல் அவள் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தாள். அவளுடன் ஓடித் தோல்வி யடைந்தவன் தன் எதிரியாகிய அரசிளங்குமரியைப் பஞ்சடைந்த கண்களால் கண்டு பெருமூச்செறிந்தான்: எனினும் என்? அரசனுடைய ஏவலாளர் அவனை பலி பீடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே அவனுடைய தலை உடலினின்றும் துணிக்கப்பட்டது.

பின்னர் ஜனங்களெல்லாம் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர் அங்ஙனம்

சென்று கொண்டிருந்த கிழவனொருவனை அரசிளங்குமரன் பார்த்து 'ஐயா! பந்தயத்தில் தோற்றதற்கு அவ்வீரன் உயிரை இழந்ததேன்? அவனுடன் ஓடிய பெண் மனுஷியா? அல்லது மானுட தேகத்துடன் விளங்கும் தேவமாதோ?' என்று கேட்டான். அவ்வார்த்தைகளைக் கேட்ட கிழவன் கோபமூண்டு அரசிளங்குமரனைப் பார்த்து 'ஐயா! நீ கூறும் அப்பெண் இவ்வுலகினின்று ஒழிந்து விட்டால் நன்றாயிருக்கும். நீ கூறுகிறபடி அவள் தேவதையல்ல. அவள் இத்தேசத்து அரசனுடைய மகள். அவளை அவளுடைய பெற்றோர்கள் ஆரம்பத்தில் கொடுமையாய் நடத்தினார்கள். அதனால் தான் அவளும் கொடுஞ்சித்தம் கொண்டவளாயிருக்கிறாள்!' என்று கூறிவிட்டு அவளுடைய பிறப்பைப்பற்றிய விஷயங்களை எடுத்துக்கூறினான். அவைகளைக் கேட்ட பின்னருங்கூட அவ்வரசிளங்குமரனுக்கு அப்பெண்ணின் மேலேயே எண்ணஞ்சென்று கொண்டிருந்ததைக் கண்ட கிழவன் மறுபடியும் அவனைப் பார்த்துக் 'உன்னுடைய நோக்கத்தைப் பார்த்தால் நீ அவளுடன் ஓடுவதற்குத்தயாரா யிருப்பது போல் தோன்றுகிறது. அவளைக் கனவிலும் கருதாதே. இதுவரை அவளுடன் ஓடியவர்களில் சற்றுநேரத்துக்கு முன் உன் கண் எதிரில் ஓடியவன் அதிக வேகமாய் ஓடினான். அப்படியிருந்துங் கூட அவனாலும்

அவளை ஜெயிக்க முடியவில்லை. டயானு என்னும் தெய்வம் அவள் சார்பிலிருக்கிறது. அதனுல் அவளை ஜெயிப்பது கூடாத காரியம். வீணில் உயிரைப் போக்கடித்துக் கொள்ளாதே' என்று புத்திமதி கூறினுன்.

அரசிளங்குமரனின் கண் முன் அட்லான்டாவின் உருவே வந்து நின்றது. அதனுல் அவனுக்கு அக்கிழவன் கூறியவை அனைத்தும் வேம்பாகத் தோன்றியது. அவன் அவ்விடத்தைவிட்டுச் சடுதியில் நீங்கிச்சென்று பற்பல இடங்களில் நடைபெற்ற பந்தயங்களிலெல்லாம் வெற்றியடைந்தான். காட்டில் நீண்ட தூரம் வரை ஓடிச்சென்று பழக்கம் பண்ணிக் கொண்டான். தனக்கு நிகரானவர் ஓடுவதில் கிடையாதென்னும்படி வெற்றிகளை யடைந்தான். எனினும் அட்லான்டாவுடன் ஓடி அவளைத் தோற்கடிப்பதற்குக் கூடுமான சக்தி தனக்கு ஏற்பட்டதா வென்பதைக் குறித்து அதிகமும் கவலை கொண்டான். கடைசியில் எது வந்தாலும் வரட்டும். அவளுடன் ஓடி அவளை ஜெயித்து விடலாம்' என்று அவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஆர்கேடியா நாட்டைச் சேர்ந்தான். அன்றைய தினத்திலும் ஒருவன் அவளுடன் ஓடி உயிரிழந்ததைக் கண்டான். அப்போதும் அவன் தன் எண்ணத்தை விடவில்லை பொழுது விடியும் நேரத்தை ஆவலுடன்

எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பொழுதும் விடிந்தது. குறிப்பிட்ட நேரமானதும் அரசன் தனது சபா மண்டபத்தையடைந்து கட்டளைகள் இட்டதுடன் ஜனங்களின் குறைகளையும் கேட்கவாரம்பித்தான்.

அரசனுடைய வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்த அரசிளங்குமரன் அவன் வந்ததும் அவ்விடத்திற்குச்சென்று தான் ஓர் அரசனுடைய குமாரனென்றும் அட்லாண்டாவைப் பந்தயத்தில் ஜெயித்துக் கலியாணம் செய்து கொள்வதற்காக வந்திருப்பதாகவும் கூறினான். அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட மன்னன் 'அரசிளங்குமரா! நீயோ உன் தகப்பனுருக்குப் பின் அரசனாக வேண்டியவன். அப்படிப்பட்ட நீ உன்னுடைய உயிரைப் போக்கடித்துக் கொள்வது முறையல்ல. டயானாவினுடைய திருவருளால் என்னுடைய குமாரத்தி ஓட்டத்தில் எல்லாரையும் தோற்கடிக்கக் கூடியவளாயிருக்கிறாள். அவளுடன் ஓடித் தோற்றுவிட்டால் நீ கட்டாயமாய் உயிர் துறக்கவேண்டும். உனக்கு முன்னதாக என் குமாரத்தியைக் கலியாணஞ் செய்து கொள்ளவேண்டுமென்ற எண்ணங் கொண்டு அநேகர் அவளுடன் பந்தயத்தில் ஓடித் தோற்றுத் தங்களுடைய இன்னுயிரைப் போக்கடித்துக் கொண்டனர். அப்பாவமெல்லாம் எங்களைச் சார்ந்திருக்கிறது.

இனியும் பாவத்தைச் சம்பாதித்துக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. ஆதலால் உன்னுடைய எண்ணத்தை விட்டொழி' என்றான்.

மன்னன் அங்ஙனங் கூறியவைகளை அரசிளங்குமரன் கேட்காமல் பந்தயத்திற்குத் தயாராயிருப்பதாகக் கூறினான். அதன்மேல் அரசன் அவனுடைய பிடிவாதத்துக்கு மெச்சி, ஒரு மாதத்திற் கப்புரம் பந்தயம் நடத்துவதாகவும் அதுவரையில் வேண்டுமானால் அவன் தன் அரண்மனையிலேயே விருந்தினராக விருக்கலாமென்றும் கூறினான். அரசனுடைய இஷ்டப்படி அவ்விடத்திலிருந்தால் அடிக்கடி அட்லான்டாவைக் காண நேரிடுமென்றும், அதனால், தான் தைரியத்தைஇழந்துவிட நேரிடுமென்று எண்ணித் தன்னுடைய பெற்றோர்களையும் உறவினரையும் சிநேகிதர்களையும் பார்த்து விட்டு வருவதாகக் கூறி அரசனிடம் விடைபெற்று அவ்வர சிளங்குமரன் அவ்விடத்தைவிட்டு அகன்றான். அவ்விடத்தினின்று அகன்றவன் தன் பெற்றோர்களையும் நண்பர்களையும் பார்த்துவிட்டு தேவாலயங்களுக்குச் சென்று அங்கெல்லாம் தேவதைகளுக்குப் பிரீதி செய்து கொண்டுவந்தான்.

கடைசியில் அவன் வீனஸ்தேவி எழுந்தருளியுள்ள இடத்திற்குச் சென்று

அவளை முறைப்படி வணங்கிப் பின் வருமாறு முறையிட்டுக்கொண்டான். 'அன்புக்கு நிலைக்களனாகிய தேவியே ! என்னுடைய எதிரியாகிய அட்லான்டாவை ஜெயிக்கும் சக்தியை எனக்குக் கொடுத்தருள வேண்டும். என்னைப்போல் அட்லான்டாவைக் காதலித்தவர்கள் ஒருவரும் இல்லை, நீ எனக்கு ஏதாவது உதவிபுரிவதாக வாக்குறுதி கொடுத்தாலல்லாமல் நான் உன்னாலயத்தை விட்டுச் செல்ல மாட்டேன். ஓ! தேவியே! அட்லான்டாவை உன்னுடைய அடிமையாகவும் என்னுடைய மனைவியாகவும் செய்துவைக்கப் பிரார்த்திக்கிறேன்.'

தனக்கு ஒரு பதில் கிடைக்கும்வரை அவ்விடத்தை விட்டுச் செல்வதில்லையென்று தீர்மானித்துக்கொண்ட அரசிளங்குமரன் அத்தேவியின் பாதார விந்தங்களிலேயே வீழ்ந்து கிடந்தான். இங்ஙனம் அவ்வரசிளங்குமரன் வீழ்ந்து கிடந்ததைக் கண்ட தேவி அவன்மீது கருணைபாராட்டி ஒருநாள் அசரீரியாய்ப் பின்வருமாறு கூறினாள். 'என்னைக்குறித்து நீ முறையிட்டவையனைத்தும் என்காதில் வீழ்ந்தன. அட்லான்டாவை ஜெயிக்க நான் உனக்கு அருள் புரிவேன். என்னுடைய பலிபீடத்தின்மீது மூன்று தங்க பழங்கள் வைத்திருக்கின்றேன். அவைகளை நீ எடுத்துக்கொண்டு அட்லான்டாவுடன் ஓடும்போது சமயம்

பார்த்து அவள் முன்னிலேயில் ஒவ்வொன்ருகப் போடவேண்டும். அங்ஙனம் நீ போட்டால் அவள் அவைகளினுடைய வனப்பைக்கண்டு அவைகளே எடுக்க முயலுவாள். அச்சமயம் நீ அவள் முன் ஓடிவிடலாம். இங்ஙனம் உன் கையிலுள்ள பழங்களின் துணைகொண்டு நீ அவளே ஜெயிப்பாய். அட்லான்டாவை நீ ஜெயித்த பிற்பாடு அவளுடன் நீ என் கோயிலுக்கு வந்து என்னே வணங்குவாய். இதுவே நீ எனக்குச் செய்யக்கூடிய பிரதியுபகாரமாகும்!'

இவ் வாசீர் வசனங்களேப்பெற்ற அரசிளங்குமரன் தேவதை தந்த தங்க பழங்களே எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட தினத்தில் ஆர்கேடியா நாட்டை யடைந்து அரசனேக்கண்டு வணங்கி நின்ருன். தான் அடலான்டாவுடன் பந்தயத்தில் ஓடி அவளே ஜெயித்துக் கலியாணம்செய்து கொள்வதற்காக வந்திருப்பதாகக் கூறினுன். அதைக் கேட்ட மன்னன் அவ்வரசிளங்குமரனே நோக்கி 'பந்தயத்தில் தோற்றுவிட்டால் உயிரைவிடத் தயார்தானு?' என்ருன். 'வேந்தே! அதற்கென்ன சந்தேகம், அவளிடத்தில் எனக்கேற்பட்டிருக்கும் அன்பு அளவு கடந்தது. அவளேக் கலியாணஞ்செய்து கொள்ள முடியாவிட்டால் என் உயிர் இருந்துதான் பயனென்ன? ஒரு பயனுமில்லேயாகையால் அவளே ஜெயித்து மணக்க

நான் எண்ணி அதற்கான நம்பிக்கையுடன் இவ்விடத்திற்குப் போந்துள்ளேன்' என்று கம்பீரமான குரலில் அரசிளங்குமரன் பதிலளித்தான்.

அரசிளங்குமரன் தைரியமாய்த் தன்னுடன் வார்த்தையாடியதைக் கண்ட மன்னன் அவனை அன்புடனழைத்துத் தன் மகளுடன் ஓடுவதற்குக் கட்டளை யிட்டான். இவர்கள் இருவரும் ஓடுவதைக் காணுவதற்காகத் திரளான ஜனங்கள் வந்து கூட்டங் கூடியிருந்தார்கள். அவர்கள் அரசிளங்குமரனைப் பார்த்து 'இதற்குமுன் வந்தவர்களை விட இவன் தைரியமும் தன்னம்பிக்கையும் கொண்டவனுயிருக்கிறுன். இவன் கட்டாயமாய் இராஜகுமாரியை ஜெயித்து விடுவான்' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அரசிளங்குமரன் பலாட்டியனுயும் அழகு வாய்ந்தவனுயுமிருந்ததைக் கண்ட மன்னன் அவனிடத்தில் இரக்கங்கொண்டு அவனுக்கு வெற்றி ஏற்படவேண்டுமென்று தன் மனதில் எண்ணிக்கொண்டான். அத்துடன் அவன் தன் குமாரத்தியை ஜெயித்து விடுவது திண்ணமென்றும் நம்பியிருந்தான்.

ஜனங்கள் அரசிளங்குமரனைப் பற்றிப் பேசிக்கொண்டது அட்லான்டாவின் காதிலும் வீழ்ந்தது. அரசகுமாரன் தன்னைப் பெரிதும் விரும்பியிருந்ததை அவள் கண்டு

கொண்டாள். அத்துடன் அவன் தன்னை ஜெயிக்கும் ஆற்றலையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தான் என்பதை அவனுடைய பார்வையாலும் அவன் கொண்டிருந்த நம்பிக்கையாலும் அவள் தெரிந்து கொண்டாள். அவளை அறியாமலே அவளுக்கு அவ்வரசிளங்குமரனிடத்தில் காதல் ஏற்பட்டது. அக்காதல் காரணமாய் அவள் அரசிளங்குமரன் தோற்றுவிட்டால் என்ன செய்வது என்று ஏக்கமுற்றிருந்தாள். உடனே அவளுக்குத் தன் சொந்த உணர்ச்சி வர, அவ்வெண்ணங்களைப் புறக்கணித்து விட்டு அவனைத் தோற்கடிக்க அரசனுடைய கட்டளையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அரசனும் அவர்கள் இருவரும் ஓட வேண்டுமென்று கட்டளை யிட்டான். உடனே இருவரும் வாயுவேகம் மனோ வேகத்துடன் ஓட ஆரம்பித்தார்கள். அட்லான்டாவுக்கோ அரசிளங்குமரனைப்பற்றிய எண்ணம் தலைக்கேறி யிருந்தமையால், அவள் ஓட்டத்தின் ஆரம்பத்தில் சற்று நிதானமாக ஓட ஆரம்பித்தாள். அரசிளங்குமரனோ ஒரே மாதிரியாய் ஓடிக்கொண்டிருந்தான். அவன் அவளுக்கு முன்னால் ஓடுவதைக் கண்ட ஜனங்கள் அவனுக்கு வெற்றி ஏற்படவேண்டுமென்று ஆசீர்வாதங் கூறினார்கள். அவ்வொலி அவளுடைய காதில்

விழ அவள் தன் தாமதத்துக்காக வருந்தி ஒரே ஓட்டமாய் ஓடி அரசிளங்குமரனுக்கு முன்னால்போக வாரம்பித்தாள். அப்போது அவனுக்கு வீனஸ் தேவதையின் அருள் வாக்குகள் ஞாபகத்திற்கு வந்தன. உடனே தங்க ஆப்பில்களில் ஒன்றை எடுத்து அப் பெண் ஓடும் பாதையின் முன்னிலையில் போட்டான். சூரியவொளியின் காந்தியில் அப்பழம் கண்களைப் பறித்துக்கொண்டு போவது போல் பிரகாசித்தது. அதனு டைய வனப்பைக் கண்ட அட்லான்டா அதை எடுக்க முயன்றாள். அப்போது அவள் கையிலிருந்த வில்லானது நழுவி வீழ்ந்தது. அத்துடன் அம்புப் புட்டிலி லிருந்த மூன்று அம்புகளும் கீழே வீழ்ந் தன. அவைகளையும் எடுக்க அவள் முயன்று கொண்டிருக்கையில் அரசிளங்குமரன் அவ ளுக்கு முன்னதாக ஓடிவிட்டான். அதைக் கண்ட அட்லான்டா தன் குலதெய்வமாகிய டயானவை வேண்டிக்கொண்டாள். உடனே அரசிளங்குமரனுக்கு முன்னால் ஓட வாரம் பித்தாள். அச்சமயம் அரசிளங்குமரன் இன்னொரு ஆப்பிலை எடுத்து அவள் ஓடும் பாதைக்குச் சற்று அப்புறமாய் அவள் கண் ணுக்குத் தெரியும்படியாய்ப் போட்டான். அதை எடுக்கலாமா எடுக்கக் கூடாதா வென்று அவள் சின்னேரம் தயங்கினாள். பின்னர், அதை எடுத்துக்கொண்டு முன் னைப்போலவே அரசிளங்குமரனுக்கு முன்

ணுல் ஓடிவிடக் கூடுமென்ற தைரியங் கொண்டு அவள் அங்ஙனமே செய்தாள். அதற்குள் அரசிளங்குமரன் அவளுக்கு முன்ஞல் வெகுதூரம் ஓடிவிட்டான்.

அவன் அங்ஙனம் ஓடியதைக் கண்ட அட்லாண்டா ஒரே ஓட்டமாய் அவனுக்கு முன்ஞல் ஓட வாரம்பித்தாள். அரசிளங்குமரனும் அவளுக்குச் சமமாக ஓடிக்கொண்டிருந்தான். இதைக் கண்ட ஜனங்கள் சித்திரப்பாவைகள்போல் அசைவற்று நின்ருர்கள். அச்சந்தர்ப்பத்தில் அரசிளங்குமரன் தன் வசத்திலிருந்த இன்னேர் ஆப்பிலேயும் அப்பெண்ணின் பாதையில் போட்டான். அதைக் கண்ட அப்பெண்மணி அதற்கு முன்னமே இரண்டு ஆப்பில்கள் தன்னுடன் இருந்ததைக்கொண்டு திருப்தியடையாமல், மூன்ருவது ஆப்பிலேயும் எடுத்துக்கொண்டு முன் இரண்டு தடவைகளில் போலவே அரசிளங்குமரனே ஜெயித்து விடலாம் என்று எண்ணிக் கீழே வீழ்ந்து கிடந்த ஆப்பிலே எடுக்க முயன்ருள். அப்போது அவள் கையிலிருந்த இரண்டு ஆப்பில்களும் கீழே நழுவி விழுந்துவிட்டன. அவைகளே எடுத்துக்கொண்டு ஓடுவதற்குள் அரசிளங்குமரன் குறிப்பிட்ட விடத்தையடைந்து வெற்றி வீரஞக நின்ருன். அவன் வெற்றி யடைந்ததைக் கண்ட ஜனங்கள் சந்தோஷ மேலீட்டால் ஆரவாரஞ் செய்தனர்.

அவ்வாரவாரத்தின் உட்பொருளை அறிந்த அரசிளங்குமரி தலை குனிந்து நின்றாள். அவனுக்கும் அவளுக்கும் ஒன்றல்லது இரண்டு கஜதூரம் தான் பாக்கியாயிருந்தது.

வீனஸ்கொடுத்த தங்க ஆப்பில்களின் உதவியால் அரசிளங்குமரன் பந்தயத்தில் ஜயித்து அட்லான்டாவை மனைவியாகப் பெற்றான். அவளும் அரசிளங்குமரனை மனமார நேசித்தாள். அவர்கள் இருவருக்கும் விவாகம் சிறப்பாக நடைபெற்றது. அவர்கள் இருவரும் பூவும் மணமும்போல் ஒருமித்து வாழ்ந்திருந்தனர். அரசிளங்குமரன் வீனஸ் தேவி விரும்பியபடியே தன் மனைவியுடன் அவளுடைய கோயிலுக்குச் சென்று அவளை முறைப்படி வணங்கினான்.

# பண்டோரா கதை.

பல யுகங்களுக்கு முன் இப்பூவுலகில் எபிமிதியஸ் என்ற ஆண் குழந்தை யொன்று பிறந்தது. அதற்குப் பெற்றோர்கள் கிடையாது. அதனுடன் சேர்ந்து விளை யாடுவதற்காக அயல் நாட்டிலிருந்து பெண் குழந்தை யொன்று கொண்டுவந்து விடப் பட்டது. அக்குழந்தையின் பெயர் பண் டோரா

அது எபிமிதியஸ் வசித்த குடிசைக் குள் நுழைந்தபோது அங்கு ஒரு பெட்டி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டது. உடனே அவ்விரு குழந்தைகளுக்கும் பின்வரும் சம் பாஷணை நடைபெற்றது:—

பண்டோரா: எபிமிதியஸ், அதோ கிடக் கும் பெட்டியில் என்ன விருக் கிறது?

எபிமிதியஸ்: எனதன்பிற் சிறந்த பண் டோரா, அதைப்பற்றிக் கேட் காதே. அது ஓர் இரகசியமான விஷயமாகும். இனி நீ அப் பெட்டியைக் குறித்துச் சிந் திக்க மாட்டாய் என்று நம்பு

கிறேன். எனக்கே அப்பெட்டி யில் என்ன இருக்கிறதென்பது தெரியாது.

பண்: அப்படியானல் அதை உனக்குக் கொடுத்தவர்கள் யார்? அப்பெட்டி எங்கிருந்து வந்தது?

எபி: அதுவும் இரகசியமான விஷய மாகும்.

பண்: அது என்ன இரகசியம்?

எபி: அதைப்பற்றிக் கவலை கொள்ளாதே. நாமிருவரும் வெளியில் சென்று மற்ற பிள்ளைகளுடன் விளையாடு வோம், வா.

பண்டோராவும் எபிமிதியஸும் வசித் துக்கொண்டிருந்த காலத்தில் உலகத்தில் கஷ்டமென்பதே கிடையாது. ஜனங்கள் சோற்றுக்காகவும் தண்ணீருக்காகவும் கஷ் டப்படவில்லை. அவர்களுக்கு வேண்டியவை களெல்லாம் மரங்களினின்று கிடைத்து வந்தன. அக்காலத்திலிருந்த ஜனங்களெல் லாம் குழந்தைகளாகவே இருந்தனர். அவர் கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள் வதே கிடையாது. அக்காலத்தில் இப் போதைப்போல் பிணி மூப்பு சாக்காடு ஆகியவைகள் ஏற்பட்டிருக்கவில்லை.

நம்முடைய பண்டோராவுக்கு மாத் திரம் அப்பெட்டியில் என்ன விருந்தது

என்பதைத் தெரிந்துகொள்ள ஆவல் உண்டானது. அதனால் அவள் சிற்சில சந்தர்ப்பங்களில் முகவாட்டத்துடன் காணப்பட்டாள். அவள் எப்போதும் அப்பெட்டியைப்பற்றித் தனக்குத் தானாகவே பேசிக் கொள்வது வழக்கம். இன்னும் சில சந்தர்ப்பங்களில் எபிமிதியஸுடன் அப்பெட்டியைக் குறித்தே பேசி மகிழ்வாள்.

அடிக்கடி பண்டோரா அப்பெட்டியைக் குறித்தே பேசிவந்ததைக் கண்ட எபிமிதியஸ் ஒருநாள் அவளை நோக்கி 'பெட்டியைப் பற்றிய விஷயங்களை விட்டுவிடு. வேறு விஷயத்தைக் குறித்துப் பேசு. வெளியில் சென்று அத்திப்பழங்களைப் பொறுக்கிப் புசிக்கலாம். வா, போவோம்' என்று கூப்பிட்டான். அதற்குமேல் பண்ரோ அவனை நோக்கி 'எந்நேரம் பார்த்தாலும் உனக்கு அத்திப்பழங்களையும் திராட்சைப் பழங்களையும் பொறுக்குவதுதானா வேலை?' என்று சொன்னாள்.

எபி: அப்படித்தான் இருக்கட்டும். பண்டோரா, வெளியே சென்று நம்மைப் போலொத்த பிள்ளைகளுடன் விளையாடிவிட்டு வருவோம்.

பண்: என் எண்ணமெல்லாம் அப்பெட்டியின் மேலேயே யிருக்கிறது. அதில் என்னதான் இருக்கிற தென்பதைச் சொல்லு பார்ப்போம்.

எபி: நான் ஒரு தடவைக்கு நூறு தடவை எனக்கொன்றும் தெரியாதென்று சொல்லியிருக்கிறேன். இப்போது மாத்திரம் அதில் என்ன விருக்கிறதென்பதை என்னால் எங்ஙனம் சொல்லக்கூடும்?

பண்: நீ அதைத் திறந்துபார்த்தால் அதில் என்ன விருக்கிறதென்பது தெரிய வரும் (என்று கூறிக்கொண்டே அப்பெட்டியின் பக்கங்களை உற்று நோக்கினாள்.)

எபி: நீ எதைக்குறித்து நினைத்துக்கொண்டிருக்கிறாய்?

எபிமிதீயஸ் கோபக் குறியுடன் கேட்டான். அதைக் கண்ட பண்டோரா இனி அதைப் பற்றிப் பேசக்கூடாதென்று சும்மா விருந்தாள். எனினும் அவள் நினைவில் அப்பெட்டி மாத்திரம் நீங்காது இருந்து வந்தது.

பண்: (சின்னேரந் தாழ்த்து) அது உனக்கு எப்படிக் கிடைத்தது என்பதைக் குறித்தாகிலும் சொல்லு.

எபி: நீ என்னுடைய குடிசைக்கு வருவதற்குச் சின்னேரம் இருக்குமுன் யாரோ ஒருவர் வந்து இப்பெட்டியை வாசற்படியண்டையில் வைத்துவிட்டுப் போனார். அவர் புன்சிரிப்புடன் விளங்

176163

கிஞர். புத்திசாலியாகவும் காணப் பட்டார். அவர் உடுத்திக்கொண்டி ருந்த ஆடை விநோதமாகக் காணப் பட்டது. அவருடைய குல்லா யானது துணியினுலும் பக்ஷிகளின் இறகுகளினுலும் தைக்கப்பட்டிருந்த படியால் அதற்கு இறக்கைகள் இருந் ததைப்போல் தோன்றியது.

பண்: அவர்கையில் ஏதாவது இருந்ததா?

எபி: ஓர் அதிகாரக்கோ லிருந்தது. அத் தகைய கோலை நீ வேறெங்கேனும் பார்த்திருக்க மாட்டாய். அக்கோல் ஒரு கழியில் இரண்டு பாம்புகள் ஒன் ருேடொன்று பின்னிக்கொண்டிருந் தது போல் காணப்பட்டது. அவற் றின் வேலைப்பாடுகளைக் கண்டு அவை உயிருள்ள சர்ப்பங்களென்றே நான் முதலில் மயங்கிப் போய்விட்டேன்.

பண்: அவரை எனக்குத் தெரியும். வேறெ வரிடத்திலும் அத்தகைய கோல் கிடையாது. அக்கழி பாதரசத்தால் செய்யப்பட்டது. அவரே என்னை உன் குடிசைக்குக் கொண்டு வந்து சேர்த்து இப்பெட்டியையும் உன் குடி சையில் வைத்துவிட்டுப் போஞர். எனக்காகத்தான் அவர் இப்பெட்டி யை இவ்விடத்தில் வைத்துவிட்டுப்

போயிருக்கிருர். இதில் எனக்குவேண்டிய ஆடைகள் வைக்கப்பட்டிருக்கலாம்; அல்லது, நீயும் நானும் ஆடுவதற்கான பொம்மைகள் இதில் வைக்கப்பட்டிருக்கலாம்; அல்லது, நாமிருவரும் தின்பதற்காகத் தின்பண்டங்களே இதில் இருக்கலாம்.

எபி: அம்மனிதர் வந்து நமக்குக் கட்டளையிடா முன்னம் நாம் அப்பெட்டியைத் திறக்கக்கூடாது.

பண்: (தனக்குத்தானே) இவனென்ன பயங்கொள்ளியாயிருக்கிருன்! இவனுக்குக் கடவுள் இன்னுஞ் சிறிதளவுக்குத் தைரியங் கொடுக்கலாகாதா?

பின்னர் பண்டோரா அப்பெட்டியைக் குறித்து அடிக்கடி தன்னைத் துன்புறுத்திக் கொண்டாள். அதைக் கண்ட எபிமிதியஸ் ஒருநாள் அவளைத் தன்னுடன் விளையாடக் கூப்பிடாமல் தான் மாத்திரம் தனித்துச் சென்ருன். வெளியே சென்றவன் "அப்பெட்டி என் குடிசைக்குள் ஏன் கொண்டு வந்து வைக்கப்படவேண்டும்? வேறு யாருடைய குடிசையிலாகிலும் கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கக் கூடாதா? அதனுல் பண்டோரா இரவும் பகலும் தன்னை வருத்திக்கொள்வதுடன் என்னையும் வருத்திகிருளே. இதற்கென் செய்வது?" என்று

தனக்குத்தானே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

எபிமிதியஸ் வெளியே சென்ற பின் பண்டோரா அப்பெட்டியை நோக்கிய வண்ணமாகவே இருந்தாள். அப்பெட்டியானது நல்ல உயர்ந்த மரத்தினுல் செய்யப்பட்டிருந்தது. அதில் முகம் பார்த்தால் முகத்தின் சாயை நன்ருய்த் தெரிந்தது. அதனுடைய மூலைகளும் ஓரங்களும் அருமையான வேலைப்பாடுடன் கூடியிருந்தன. அதனுடைய ஓரங்களில் அழகு வாய்ந்த ஸ்திரி புருஷர்களின் உருவங்களும் குழந்தைகளின் உருவங்களும் தீட்டப்பட்டிருந்தன. அப்பெட்டியின் பக்கங்களில் செய்யப்பட்டிருந்த பூவேலைப்பாடுகள் கண்களைக் கவர்ந்தன. பெட்டியினுடைய மூடியின் மத்தியில் செய்யப்பட்டிருந்த வேலைப்பாடுகள் எல்லா வேலைப்பாடுகளைக் காட்டிலும் சிறந்திருந்தன. அவ்வேலைப்பாடுகளையும் பெட்டியையுமே பண்டோரா நோக்கிக்கொண்டிருந்தாள். அப்போது அப்பெட்டியானது பின்வருமாறு பேசியதைப்போல் பண்டோரா நினைத்தாள்: ‘பண்டோரா, பயப்படாதே! பெட்டியைத் திறந்து பார்த்தலினுல் யாதொரு கெடுதலும் சம்பவியாது. பயங்கொள்ளியாகிய எபிமிதியஸைக் கவனிக்காதே. அவனைக் காட்டிலும் நீயே புத்திசாலி. அவனைவிட உனக்

கதிகமான தைரியமிருக்கிறது. பெட்டியைத் திறந்துபார். அதில் அழகான வஸ்துக்கள் காணப்படும்'.

அப்பெட்டியானது பொற்கயிற்றினுல் கட்டப்பட்டிருந்தது. முடிச்சில் கயிற்றின் ஆரம்பமும் முடிவும் தெரியவில்லை. ஆதலால் பண்டோராவின் ஆச்சரியம் இன்னும் அதிகமாயிற்று. ஒரு தடவைக்கு மூன்று தடவை அம்முடிச்சைக் கையில் எடுத்துப் பார்த்தாள். ஆனுல் அதை அவிழ்த்துப் பார்க்க அவளுக்குத் தைரியம் ஏற்படவில்லை. சமயம் நேர்ந்தபோதெல்லாம் அப்பெட்டியைக் குறித்துத் தன்க்குத் தெரிந்தவர்களிடத்திலெல்லாம் சொல்லிக் கொள்ளுவாள். கோபமாயிருக்குஞ் சந்தர்ப்பங்களில் அப்பெட்டியைக் காலால் உதைத்துத் தள்ளுவாள். இங்ஙனமாக அவள் தன் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தாள்.

அன்று, 'என்னவானுலும் ஆகட்டும். அப்பெட்டியைத் திறந்துபார்ப்போம்' என்ற தைரியத்துடன் பெட்டியைத் திறக்க அதனருகில் சென்றுள். அப்பெட்டியைத் திறப்பதற்காக அம்முடிச்சின்மீது கையை வைத்து அதை இப்படியும் அப்படியும் ஆட்டிக்கொண்டிருந்தாள். அங்ஙனமிருக்கையில் அம்முடிச்சானது திடீரென்று அவிழ்ந்து விட்டது. அதைக் கண்ட பண்

டோரா எபிமிதியஸ் வந்தால் என்ன சொல்லுவானோ வென்று பயப்பட்டாள். அதை முன்னைப்போலவே கட்டிவிட முயற்சித்தாள். முடியவில்லை. அதன்மேல், மூடியைத் திறந்து பெட்டியில் என்ன விருந்தது என்பதைக் காண அவள் தைரியங்கொண்டாள். அப்போது பெட்டியிலிருந்து ஒரு குரலானது தன்னை விளையாடக் கூப்பிடுவதாக நினைத்து அவள் நாலாபக்கங்களிலும் திரும்பிப்பார்த்தாள். ஒருவரும் காணப்படவில்லை.

நிற்க, பண்டோராவைக் குடிசையில் விட்டுச் சென்ற எபிமிதிஸுக்கு விளையாட்டில் கவனம் செல்லவில்லை. அதைக் கண்டு அவனுடன் விளையாடிய சிறுவர்கள் ஆச்சரியப்பட்டுக் காரணம் என்னவென்று கேட்டார்கள். அதற்கவன் பதிலொன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்தான். கடைசியில் அங்கே கிடந்த புஷ்பங்களை எடுத்து அவைகளை ஒரு மாலையாகக் கட்டிப் பண்டோராவுக்குக் கொடுக்கக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான். அப்போது ஆகாயத்தில் கார்மேகங்கள் நாலாபக்கங்களிலும் சூழ வாரம்பித்தன. எபிமிதியஸ் வீட்டை யடைந்தவுடன் மேகங்கள் சூரியனையும் மறைத்துக்கொண்டன.

எபிமிதியஸ் வீட்டை யடைந்தபோது பண்டோரா பெட்டியைத் திறக்கும் சந்தர்ப்

பத்திலிருந்தாள். அப்போது அவன் கூச்ச லிட்டிருந்தால் அவளும் அதைத் திறந் திருக்கமாட்டாள். பெட்டியைப்பற்றிய இர கசியமும் தெரியவராமலே இருந்திருக்கும். எபிமிதியஸுக்கும் பெட்டியைத் திறந்து பார்க்கவேண்டுமென்ற ஆசை யிருந்தபடி யால் அவனும் பண்டோராவின் செயலைக் கண்டும் காணுதவனைப்போ லிருந்துவிட் டான்.

எபிமிதியஸின் வருகையை உணராத பண்டோரா பெட்டியைத் தைரியமாய்த் திறந்தாள். குடிசை யெங்கும் இருள்மய மாய்ப் போயிற்று. மின்னல் மின்னிற்று; இடி இடித்தது; பெட்டியிலிருந்து இறக்கை களுடன் கூடிய பிராணிகள் வெளிக்கிளம்பி நாலாபக்கங்களிலும் பறக்கலாயின. எபிமிதி யஸ் பாதை பொறுக்கமாட்டாமல் 'ஐயோ! அவைகள் என்னைக் கொட்டிவிட்டன' என்று கூச்சலிடுவதாகப் பண்டோராவின் காதில் கேட்டது. உடனே அவள் பெட்டி யை மூடிவிட்டு எபிமிதியஸைக் கவனிக்கச் சென்ருள். எங்கும் ஒரே காரிருளாயிருந்த படியால் அவள் கண்ணுக்கொன்றும் புலப் படவில்லை. ஈக்கள் அல்லது பெருத்த கொசுக்கள் சத்தமிடுவதைப்போன்ற சத்தம் அவளுடைய காதில் கேட்டது. இருட்டில் பார்ப்பதற்கு அவள் அதற்கு முன் பழகி யிருந்தாளாகையால், வௌவால்களின் சிறகு

களை யொத்த சிறகுகளோடு பார்ப்பதற்குப் பயங்கரமான பிராணிகள் வால்களில் விஷமேறிய கொடுக்குகளுடன் நாலாபக்கங்களிலும் பறந்துகொண்டிருந்ததைக் கண்டு அவைகளில் ஒன்று எபிமிதியயைக் கொட்டிவிட்டிருக்கவேண்டுமென்று எண்ணினுள். உடனே அப்பிராணிகளில் ஒன்று பண்டோராவையும் கொட்டி விட்டது. அதனுல் அவள் சொல்லி முடியாத பாதைபட்டு வருந்தினள்.

இனி, பெட்டியிலிருந்து வெளியில் வந்தவை என்னவென்று கவனிப்போம். அவையே உலகத்தில் இதுகாலை ஏற்பட்டுள்ள துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் மூலகாரணம். அவை அதுவரை அப்பெட்டியில் அடைத்து வைக்கப் பட்டிருந்தன. அவைகளைப்பண்டோரா திறந்து வெளியில் விட்ட நாள் முதற்கொண்டு உலகத்தில் கெட்ட எண்ணங்களும் கவலைகளும் துன்பங்களும் வியாதிகளும் கொடுஞ்செயல்களும் இன்னு மிவைபோன்ற பிறவும் ஏற்படலாயின. பண்டோராவும் எபிமிதியஸூம் அப்பெட்டியைத் திறந்திராவிட்டால் இத்தகைய கஷ்டங்களெல்லாம் உலகத்துக்கு நேர்ந்திரா ஒருவரிருவருடைய அடாத செய்கையினுல் உலகத்திலுள்ள அனைவர்க்கும் கேடுண்டாகிறது.

பண்டோராவும் எபிமிதியஸூம் பாதை

பொறுக்கமாட்டால் தங்களுடைய வீட்டுக் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்துவிட்டார்கள். அதனால் அவை ஊரெங்கும் பரவலாயின. ஜனங்களுக்கெல்லாம் கஷ்டம் ஏற்பட்டது. அதுவரையில் பிணி, பசி, மூப்பு, துன்பம் என்பவைகளை உணராதிருந்த ஜனங்கள் அவைகளை உணர ஆரம்பித்தனர். அதுவரை வாடிப் போகாமலிருந்த புஷ்பங்களெல்லாம் வாடலாயின; பட்டுப்போகாமல் நிலைத்திருந்த மரங்களெல்லாம் பட்டுப்போகவாரம்பித்தன. சாக்காடு என்பதை உணராமல் எப்போதும் குழந்தைகளாக விருந்த ஜனங்கள் விருத்தாப்பியமடைந்து இறுதியில் மாண்டனர்.

தங்களுக்கு நேர்ந்த ஆபத்தைக் குறித்து எபிமிதியஸும் பண்டோராவும் தங்களுக்குள் கோப மூண்டு ஒருவரையொருவர் நொந்துகொள்ளவாரம்பித்தனர். பண்டோராவைக் காண மனமில்லாதவனாகிய எபிமிதியஸ் தன்னுடைய முதுகைப் பண்டோராவின் பக்கமாய்த் திருப்பிக் கொண்டு வருத்தத்துடன் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண் டிருந்தான். பண்டோராவும் தலையைப் பெட்டியின்மேல் சாய்த்துக் கொண்டு தரையில் படுத்து அழுதுகொண் டிருந்தாள். இவர்களிருவரும் இப்படியிருந்துகொண் டிருக்கையில், பெட்டியின் உள்ளே இருந்து யாரோ தட்டுவதைப்

போன்ற சப்தம் பண்டோராவுக்குக் கேட்டது. அவள் தலையைத் தூக்கிக்கொண்டு அச்சப்தம் யாதாயிருக்கலாமென்று கவனிக்க வாரம்பித்தாள். எபிமிதியஸ் வாளா கிடந்தனன். அதைக் கண்ட பண்டோரா அவனை நோக்கி 'என்னிடத்தில் பேசாமல் மௌனஞ் சாதிப்பது உனக்கழகோ?' என்றாள்.

மறுபடியும் முன் மாதிரியாகவே சப்தம் உண்டாயிற்று. அதன்மேல் பண்டோரா பெட்டியைத் திறக்காமலே 'நீ யார்?' என்று கேட்டாள். அதற்குப் பெட்டியிலிருந்தபடியே 'பெட்டியைத் திறந்தால் விஷயம் தெரியவரு'மென்று மெல்லிய குரலில் ஏதோவொன்று பதில் சொல்லியது. அதைக் கேட்ட பண்டோரா, 'பெட்டியைத் திறந்ததினால் படாத பாடும் பட்டாய் விட்டது; இனியுமா படவேண்டும்? துஷ்ட ஜந்துக்கள் இப்போதே நாலாபக்கங்களிலும் பரவி ஜனங்களுக்குக் கஷ்டங்களை யுண்டாக்கிக்கொண் டிருக்கின்றன. அவைகளே உலகத்துக்கெல்லாம் கேடு சூழப் போதுமானவை. இனியும் நான் முன்னைப்போல் மௌடீகமாய்ப் பெட்டியைத் திறந்து விடுவேன் என்று எண்ணாதே' என்று கூறினாள்.

அக்குரல் தன்னை வெளியே விடும்படி மீண்டும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. அதன்மேல் பண்டோரா என்ன செய்வதென்று

தோன்ருமல் சின்னேரம்வரை திகைத்துக் கொண்டிருந்து விட்டுக் கடைசியில் 'என்ன வந்தாலும் வரட்டு' மென்று அப்பெட்டி மூடியைத் திறக்கப்போனுள். அது பளுவா யிருந்தமையால் அவளால் அதைத் திறக் கக் கூடவில்லை. அதை யறிந்த எபிமிதியஸ் அவளுக்குத் தன்னுலான உதவியைப் புரிந் தான். இருவருமாகச் சேர்ந்து பெட்டியின் மூடியைத் திறந்தார்கள். உடனே அப் பெட்டியிலிருந்து சூரியனுடைய பிரகாசத் துக்கு ஒப்பாகிய பிரகாசத்துடன் கூடிய மாதொருத்தி வெளிக்கிளம்பினுள். அவள் தன்னுடைய சிறு விரலால் எபிமிதியஸைத் தடவிக் கொடுத்தாள். உடனே அவனுக் கிருந்த பாதையெல்லாம் காற்ருய்ப் பறந் தோடியது. பின்னர் அத்தேவதை பண்டோ ராவைத் தடவிக் கொடுக்க அவளுடைய பாதையும் நீங்கியது. அதன் மேல் பண் டோரா அம்மாதை நோக்கி 'நீயார்?' என்று கேட்டாள். அதற்கு அம்மா துதன்னுடைய பெயர் நம்பிக்கை யென்றும், உலகத்தி லுள்ள ஜனங்களுக்கு நம்பிக்கையும் மன வெழுச்சியும் உண்டாக்கத் தான் அனுப்பப் பட்டிருப்பதாகவும் கூறினுள்.

அம்மாதின் பிரிய வசனங்களைக் கேட்ட பண்டோரா அம்மாதை நோக்கி, 'அம் மணி, தாங்கள் எப்போதும் எங்களு டன் இருக்கப் பிரார்த்திக்கிருேம்' என்று

கேட்டுக் கொண்டாள். 'அப்படியே யாகுக' வென்று அத்தேவதை வாக்களித்தது' அதைக்கேட்டு அவர்க ளிருவரும் சந்தோஷித்தார்கள்.

---

# உண்மை நட்பு

## அல்லது

# தாமனும் பிதியஸூம்

மத்தியதரைக்கடல் என்னும் பெயரைக் கொண்ட கடலிடையே சிசிலித்தீவு என்னும தீவு ஒன்று இருக்கிறது. அத்தீவிற்கு முக்கிய நகரம் ஸைரகஸ். அது மிகவும் அழகுவாய்ந்த நகரம். அந்நகரில் அநேக ஆண்டுகளுக்குமுன் தாமன், பிதியஸ் என்ற இரண்டு சிநேகிதர்கள் இருந்தனர். அவர்கள் எக்காரணம் பற்றியும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிவதில்லை. அவர்களைப் போல் ஒருவரை யொருவர் அவ்வளவு அந்நியோந்யமாய்ச் சிநேகித்தவர்கள் அந்நகரில் எவரும் கிடையாது. அவர்கள் உண்மை நட்புக்கு ஓர் உதாரணமாக விளங்கினர். இங்ஙன மிருக்கவே அப்பட்டணத்து மக்கள் அனைவரும் அவர்களுடைய இடையரு நட்புக்கு மெச்சி அவர்களைக் கொண்டாடினார்கள்.

தாமனும் பிதியஸூம் இங்ஙனம் வாழ்ந்து வருகையில் அவர்களுடைய நட்பைப் பின்னும் சோதிப்பதற்கான சம்பவம் ஒன்று நடந்தது. அச்சம்பவத்தினால் அவர்களு

டைய நட்பின் பெருமை உயர்ந்ததேயொழி யக் குறையவில்லை.

அச்சமயம் சிசிலித்தீவைத் தயோனி ஸியஸ் என்ற மன்னன் ஆண்டுகொண் டிருந்தான். அவன் கொடுங்கோலனுயிருந்த படியால், அவனுடைய பிரஜைகள் அவனை வெறுத்து வந்தனர். தயோனிஸியஸ் மன் னன் எளிய குடும்பத்தில் பிறந்தவன். அவன் தன்னுடைய உழைப்பாலும், புத்தி சாதுர்யங்களினாலும், தந்திரமான செயல் களாலும் இராஜ்யத்தையும் செங்கோலையும் சம்பாதித்துக் கொண்டான். அவன் சிறி யவனு யிருந்தபோது அவனுடைய எஜமா னர்கள் அவனைக் கொடுமையாய் நடத்தி வந்தார்கள். அதை அவன் மறக்கவேயில்லை. பட்டத்திற்கு வந்ததும் அவன் தன் ஆட் சிக்குட்பட்ட ஏழைப் பிரஜைகளையும் மற்று முள்ளவர்களையும் தன் மனம் போனவாறு கொடுமையாய் நடத்தி வந்தான். ‘வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் என்ன செய்யும்?’ என்பதற்கிணங்க, அரசனே குடிகளைக் கொடுமையாய் நடத்தத் தலைப்பட்டதனுல், அவனுடைய உத்தியோகஸ்தர்களும் அவ னுடைய செயலைப் பின் பற்றிக் குடிகளைக் கொடுஞ் செயல்களுக்கு உட்படுத்தினர்.

இத்தகைய அரசாட்சியில் பிதியஸ் இராஜத்துரோகம் செய்தான் என்று குற் றஞ் சாட்டப்பட்டது ஓர் ஆச்சரியமல்லை.

தயோனிஸியஸ் விஷயங்களை ஆலோசிக்காமல் பிதியஸுக்குத் தூக்குத்தண்டனை விதித்தான். இவ்வநியாய தண்டனையைக் குறித்துப் பிதியஸ் வருந்தவில்லை. ஆனால் அவன் இறப்பதற்கு முன் குடும்ப சம்பந்தமான சில விஷயங்களைத் தீர்த்துவைக்க வேண்டியதாயிருந்தது. ஆகவே அவன் அரசனை நோக்கிப் பின் வருமாறு வேண்டிக்கொண்டான்:

பிதியஸ்: வேந்தே! எனக்குத் தாங்கள் மரண தண்டனை விதித்ததற்காக யான் வருந்தவில்லை. என் குடும்ப சம்பந்தமான சில விஷயங்களை இறப்பதற்கு முன் தீர்த்து வைக்கவேண்டியவனாயிருக்கிறேன். ஆகையால் ஏழையின் மீது கருணை கூர்ந்து என்னை வீட்டுக்கு அனுப்பினால் யான் வீடுசேர்ந்து குறித்த காலத்திற்குள் திரும்பி வந்து மரண தண்டனையை யேற்றுக்கொள்கிறேன். இது உண்மையே தவிற வேறல்ல.

பிரஜைகள்: இராஜாதி ராஜனே! நாங்களும் இது சமயம் பிதியஸ் சார்பாய்த் தங்களிடம் விண்ணப்பித்துக் கொள்வது ஒன்றுண்டு. பிதியஸ் சொன்ன சொற் பிசகாத புண்ணிய புருஷன். அவரை நாங்கள் நீண்ட காலமாக அறிவோம். அவருடைய

வேண்டுகோளைத் தாங்கள் அங்கீகரிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

தயோனிஸியஸ்: பிரஜைகளே! நீங்கள் கூறுவது வாஸ்தவமே. எனினும் பிதியஸ் மனிதன் தானே, அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட் டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொருவரும் எங்ஙனமாகிலும் மரண தண்டனையினின்று விலக முயற்சிப்பது மனித இயற்கையாம். ஆகவே அவனுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள யானும் சிறிது தயங்குகிறேன். நீங்கள் அனைவரும் ஒரே மொத்தமாய்ப் பிதியஸ் சார்பாகப்பேசுகிறபடியால் உங்களுக்காக ஒருயோசனை கூறுகிறேன். அந்த யோசனையின்படி பிதியஸ் நடப்பதா யிருந்தால் அவனுடைய வேண்டுகோள் நிறைவேறும்.

பிரஜை: அரசே! தங்களுடைய யோசனையைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

தயோ: பிதியஸ் தனக்குப் பதிலாக வேறொரு மனிதனை ஜாமீனாக வைத்துவிட்டுப் போவதா யிருந்தால் அவனுடைய வேண்டுகோள் அங்கீகரிக்கப் பெறும். குறித்த காலத்திற்குள் அவன் திரும்பிவாராவிட்டால் ஜாமீனாக வைக்கப்படும் மனிதன் தூக்கிடப்படுவான்.

இதற்குச் சம்மதித்தால் பிதியஸ் வீட்டிற்குச் சென்று வர உத்திரவு கொடுக்கிறேன். இதைத் தவிர வேறு உத்திரவு யாதொன்றுமில்லை. இதற்கு அவன் என்ன பதில் சொல்லுகிறான் என்பதைத் தெரிவியுங்கள்.

பிதி: வேந்தே! தங்களுடைய உத்திரவைக் கேட்டேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய எண்ணியுள்ளேன்.

அரசனுடைய கட்டளையைக் கேட்ட பிதியஸுக்குத் தன் நண்பனாகிய தாமனுடைய ஞாபகம் வந்தது. உடனே அவனை அழைத்து வரப் பிதியஸ் ஆள் விட்டனுப்பினான். விஷயம் தெரிந்து கொண்ட தாமன் சிறிதும் தயங்காமல் தன்னுடைய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டுப் பிதியஸ் இருந்த விடத்தை அடைந்தான். உடனே அரசனை நோக்கித் தன்னைப் பிதியஸுக்குப் பதிலாக ஜாமீனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தாமன் கேட்டுக் கொண்டான். அதன் மேல் அரசன் பிதியஸுக்கு விடை கொடுத்தனுப்பினான்.

பின்னர் அரசன் தாமனை நோக்கிப் 'பிதியஸுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதனால் அவன் ஒரு வேளை திரும்பி வாராமற்போனாலும்போகலாம். அப்போது

உன்னைக் கழுவிலேற்றி விடுவோம். அதற்கென்ன செய்வாய் ?' என்று கேட்டான்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட தாமன் புன்சிரிப்புக்கொண்டு அரசனை நோக்கி, 'வேந்தே! என்னுடைய நண்பராகிய பிதியஸ் நீர் கூறுகிறபடி நடக்கக் கூடியவரல்லர். அவருக்கு மரணம் அல்லது சிறைவாசம் எதிர்பாராத விதமாய் ஏற்பட்டால் அப்போது ஒரு வேளை அவர் குறித்த காலத்திற்குள் வந்து சேராமல் போகலாம். இல்லாவிட்டால் அவர் கட்டாயமாய்க் குறித்த காலத்திற்குள் வந்து சேருவார். இதற்கிடையில் நான் கடவுளை வேண்டுவது யாதெனில் அவருக்குச் சிறைவாசம் ஏற்பட்டு அதனால் குறிப்பிட்ட தினத்தில் வாராமல் போய் அவருக்குப் பதிலாக நான் தூக்கிலிடப்பட்டு என் உயிரை வழங்க வேண்டுமென்பதாம். இப்பிரார்த்தனையைக் கடவுள் நிறைவேற்ற வேண்டுமென்று அவரை நான் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன்' என்று சொன்னான்.

இச் சீரிய வார்த்தைகள் அக்கொடிய மன்னனுடைய இருதயத்தையும் க்ஷண நேரம் வரை இளகச்செய்தன. பின்னர் அவன் தாமனை நோக்கி, 'ஏ! தாமனே, பிதியஸ் திரும்பிவாராவிட்டால் நீ கட்டாயமாய்க் கொல்லப்படுவாய். இதில் சந்தேகமில்லை' என்று கடுகடுத்துச் சொன்னான்.

நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறதல்லவா? அதற்கிணங்க, பிதியஸூக்குப் போன விடத்தில் ஒன்றின்மேலொன்றாகக் கஷ்டங்களும் தடைகளும் எதிர்பாராத விதமாய் நேரிட்டுக்கொண்டு வந்தன. அவை காரணமாய் அவன் தான் எண்ணிச் சென்றபடி வந்துவிடக் கூடவில்லை. அதைக் கண்ட பிதியஸ் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மனம் வருந்தலானான் கடைசியில் அவன் தன்னால் கூடிய மட்டும் குறிப்பிட்ட தினத்துக்குள் வந்து சேர்ந்துவிடப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து தன் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டு வந்துகொண் டிருந்தான். வழியிலெல்லாம் தான் போய்ச் சேர்வதற்குள் தாமனை எங்கே தூக்கிலிட்டுக் கொன்று விடுகிறார்களோவென்ற எண்ணமே பிதியஸைப் பெரிதும் பாதித்து வந்தது.

நிற்க, குறிப்பிட்ட நாளும் வந்தது. அரசன் ஒரே பிடிவாதமா யிருந்து பிதியஸூக்குப் பதிலாகத் தாமனைத் தூக்கிலிட்டுக் கொன்றுவிடக் கட்டளை பிறப்பித்தான். அதற்காகத் தூக்குமரமும் தயாரிக்கப்பட்டது. மற்றுமுள்ள ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. பின்னர், அரசன் தாமன் அடைக்கப்பட்டிருந்த இடத்திற்குச்சென்று அவனை நோக்கி, 'ஐயோ! நீ இவ்வளவு மௌடீகமா யிருக்கலாமா? பிதியஸ் இன்

னும் திரும்பி வரவில்லையே? அவனுக்குப் பதிலாக உன்னைத் தூக்கிலிட்டுக் கொல்லப் போகிறோம். அதற்கு நீ என்ன செய்வாய்?' என்று கேட்டான்.

அரசனுடைய வார்த்தைகளைக் கேட்ட தாமன் சிரித்துவிட்டுத் தன்னுடைய நண்பன் தன்னை ஏமாற்றிவிட மாட்டானென்றும், அவன் கட்டாயமாய் வந்துவிடுவானென்றும் எண்ணி, அரசனுக்குப் பதில் ஒன்றுஞ் சொல்லாதிருந்தான். பின்னர் அரசனுடைய காவலாளிகள் தாமனைக் கொலைக் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போதும் அவன் சிறிதும் வருத்தப்படாமல் சிரித்துக் கொண்டிருந்தான் அவனுடைய சாந்தத்தையும் சந்தோஷத்தையும் கண்ட ஜனங்கள், 'இவன்தேவனா? இவனை இன்னும் கொஞ்ச நேரத்துக்குள் கொன்று விடப்போகிறார்கள். அப்படியிருந்தும் இவன் சிறிதும் வருத்தப்படவில்லையே! இத்தகைய மனிதனை நாம் எங்கும் கண்டதில்லையே!' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

இங்ஙனம் அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், காற்றுவேகம் மனோவேகம் என்று சொல்லக்கூடிய வேகத்துடன் ஒருவன் தூக்குமரத்தை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். அவன் யாராயிருக்கலாமென்று ஜனங்கள் திரும்பிப் பார்ப்பதற்

குள், ஓடிவந்தவன், தூக்கு மரத்தண்டை யில் வந்து தன் நண்பனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, 'இப்போதாகிலும் உன் னைக் காக்க வந்தேனே!' என்று சொல் லிக்கொண்டு கண்களில் நீர் தாரை தாரை யாகப் பெருக்கினான்.

அக்காட்சியைக் கண்ட மன்னன் ஒன் றுந் தோன்றாமல் அசைவற்று நின்று அவ் விரு நண்பர்களுடைய சிநேகத்தைக்கொண் டாடி 'உலகில் இவர்களை யொத்த நண்பர் களும் இருக்கிறார்களா!' என்று பேராச் சரியங்கொண்டு, அவர்களருகில் சென்று பிதியஸ—க்கு விதிக்கப்பட்ட மரண தண் டனை ரத்து செய்தாய்விட்டதென்றுந் தன் னையும் அவர்கள் தங்களில் ஒருவனாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் களை வேண்டிக்கொண்டான். இவ்வதிசயங் களைப் பார்த்துக்கொண் டிருந்த ஜனங்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர்விட்டுக் கடவு ளுக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்ற பொய்யா மொழிக்கு ஓர் உதாரண மாய் விளங்கியவர்கள் தாமனும் பிதி யஸ—ம் ஆவர்.

பிள்ளைகளே, நீங்களும் தாமனும் பிதியஸூம் நடந்து கொண்டதைப்போலவே நடந்து கொள்ளவேண்டு மல்லவா?

---

The Progressive Printers, Madras.